| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | **24/01/2024** | முதல் | **28/01/2024** |
| | அறிக்கை எண் : | **007/ 2024** | வெளியீட்டு நாள் : | **23/01/2024** | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31°- 32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19° - 21° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (18.01.2024 முதல் 22.01.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 28-01-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18/01 | 19/01 | 20/01 | 21/01 | 22/01 | தேதி | நாள்-1 24/01 | நாள்-2 25/01 | நாள்-3 26/01 | நாள்-4 27/01 | நாள்-5 28/01 |
| 0.0 | 0 | 0.1 | 0 | 0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 32 | 32 | 32 | 33 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 32 | 32 | 32 | 32 | 32 |
| 21 | 18 | 18 | 20 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 23 | 24 | 24 | 24 |
| 5 | 2 | 3 | 4 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 0 | 4 | 1 | 1 | 7 |
| 87 | 83 | 67 | 77 | 83 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 55 | 43 | 46 | 43 | 53 | | 50 | 50 | 40 | 40 | 40 |
| 8 | 8 | 11 | 7 | 10 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 8 | 10 | 10 |
| கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | தென் கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவும். அதிகாலை நேரங்களில் மூடுபனி காணப்பட வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 23°-24° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் தெளிவானது முதல் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 10 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு, கிழக்கு மற்றும் வடகிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

அடுத்த 5 நாட்களுக்கு மாவட்டத்தில் வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு, எனவே விவசாயிகள் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். உங்கள் நிலத்தில் மண்ணின் ஈரப்பதத்தின் அடிப்படையில் காய்கறி பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யவும். அதிகாலை நேரங்களில் மூடுபனி நிலவ வாய்ப்புள்ளதால், உங்கள் கால்நடைகளை சூரிய உதயத்திற்கு 2 மணி நேரத்திற்குப் பிறகு மட்டுமே மேய்ச்சலுக்கு அனுமதிக்கவும்.

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (24 ஜன - 01 பிப்ரவரி 2024):**

**மழைப்பொழிவு :**

24-01-2024 - 01-02-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் பொதுவாக வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு உள்ளது

**அதிகபட்ச வெப்பநிலை :**

24-01-2024 - 01-02-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 28° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

24-01-2024 - 01-02-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 16° செல்சியஸ் முதல் 20° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : நெல், பருத்தி, கால்நடை.**

**நெல்:**

நெல் பயிரைத் தாக்கும் குருத்து ஈக்களின் தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்புள்ளது. இவ்வகை ஈக்களின் தாக்குதலால் நெற்பயிரில் மஞ்சள் கலந்த வெள்ளைநிற நீளவாட்டு கொப்புளங்கள் துளையுடன் காணப்படும்.

இலைகள் சுருங்கி பயிர்கள் வளர்ச்சி குன்றியும், இளம் இலைகளின் நுனிப்பகுதி கீழ்ப்புறமாக தொங்கியும் காணப்படும்.

வயல்களில் மாற்று சார்பு செடிகளை அகற்ற வேண்டும், பரிந்துரைக்கப்பட்ட சாம்பல் சத்து உரத்தை இடவேண்டும்.

மேலும் ஒரு ஏக்கருக்கு 350 மில்லி என்ற அளவில் புப்ரோபெசின் என்ற பூச்சிக்கொல்லியை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

.

**பருத்தி :**

விவசாயிகள் பருத்தி அறுவடையினை காலை இளம்வெயில் நேரத்தில் 8-11 மணிக்குள்ளாகவும், மாலை 3-6 மணிக்குள்ளாகவும் செய்வது நல்லது.

இரவு நேர பனிப்பொழிவின் காரணமாக பருத்தியில் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் அதிகாலையில் சேகரிக்கப்படும் பருத்தியின் தரம் குறைய வாய்ப்பு உள்ளது.

அதேபோல் நடுப்பகலில், வெப்பமான சூழ்நிலையில் எடுக்கப்படும் பருத்தியில், காய்ந்து ஒடிந்த பூவிதழ்களும், சருகுகளும் நல்ல பருத்தியோடு கலந்துவிடும் வாய்ப்பு உண்டு.

மேலும் பச்சை காய்களை வெயிலில் உலர்த்தி வெடிக்கச் செய்தோ அல்லது தடியால் அடித்து பின்பு பருத்தியை காய்களிலிருந்து பிரித்து எடுப்பதும் தவிர்க்கப்பட வேண்டும்.

**கால்நடை:**

நிலவும் தட்பவெப்ப சூழ்நிலையில் தங்களது கால்நடைகளுக்கு காளை நோய் வர வாய்ப்பு உள்ளது.

இந்நோயிலிருந்து தங்கள் மாடுகளை காப்பற்ற விவசாயிகள் ஜனவரி மாதத்தில் அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி தங்களின் மாடுகளுக்கு கால்கானை வாய்க்கானை (கோமாரி) நோய்க்கான தடுப்பூசி மருந்தினைப் போட்டுக் கொள்ளவும்.